(இ) ஆமெனில், அவர்களது சம்பள விகிதம் ஏதேனும் உயர்த்தப்பட்டுள்ளதா ?

(உ) இல்லையெனில், காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) தற்போதைய நிலையில் இவர்களுடைய அந்தஸ்தை அரசிதழ் பதிவுற்றதாக மாற்றத் தேவையில்லை என அரசு தீர்மானித்துள்ளது.

Petition given by the Councillors of Thiruvannamalai Municipality

* 24 Q.—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state--

(a) whether the Councillors of Thiruvannamalai Municipality have given any petition to the Government on or about 4th January 1973;

(b) if so, the details thereof; and

(c) the action taken thereon by the Government ?

திருவண்ணாமலை நகர மன்ற உறுப்பினர்கள்—புகார் மனு

திரு. எல். பலராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 4-1--1973-ஆம் நாள் வாக்கில் வட ஆற்காடு மாவட்டம் திருவண்ணாமலை நகர மன்ற உறுப்பினர்கள் அரசுக்குப் புகார் மனு ஏதும் கொடுத்தனரா ?

(இ) ஆமெனில், அதன் விபரம் யாது ?

(உ) அதன் மீது, அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) & (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

Making Tiruchirappalli Municipality into a Corporation

* 25 Q.—THIRUVALARGAL S. VELLAPANDIAN AND G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to make the Tiruchirappalli Municipality into a Corporation; and

(b) if so, the stage at which the matter now stands ?

1973 நவம்பர் 21]

திருச்சிராப்பள்ளி நகராட்சியை மாநகராட்சியாக மாற்றுதல்

திரு. எஸ். வெள்ளபாண்டியன் & திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி நகராட்சியை மாநகராட்சியாக மாற்றுவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆமெனில், இது தற்போது எந்நிலையிலுள்ளது ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) இக்கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

Election to the Madras Corporation

* 26 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether it is a fact that the election to the Madras Corporation scheduled to be held in November is to be postponed;

(b) if so, the reason for such postponement; and

(c) when the election is likely to be held?

சென்னை மாநகராட்சித் தேர்தல்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நவம்பர் திங்களில் நடைபெறவிருந்த சென்னை மாநகராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்படவிருப்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அவ்வாறு ஒத்திவைக்கக் காரணம் என்ன ?

(உ) அத்தேர்தல் எப்போது நடத்தப்படவிருக்கிறது ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) மின்வெட்டின் காரணமாக வாக்காளர் பட்டியல் அச்சிடுதல் குறித்த காலத்தில் முடிவுபெறவில்லை. எனவே அக்டோபர் 73-ல் மாநகராட்சித் தேர்தலை நடத்துவது இயலாததாயிற்று. ஆதலின் மாநகராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(உ) மாநகராட்சித் தேர்தல் ஏப்ரல் 1974-ல் நடைபெறவிருக்கிறது.